<u>4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை</u>

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**MCOP No. 5/2022** நாள்: **09.07.2025** ம.சா.1 – கருப்புசாமி

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, **1** மற்றும் **2** எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

இந்த வழக்கில் இறந்த போன கண்ணம்மாளின் மகன் தான் நான் என்றால் சரிதான். நான் எனது தனியாக தான் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல, எனது தாயாருடன் தான் வசித்து வருகிறேன். மனுதாரர்களில் இருவருக்கு திருமணமாகிவிட்டது. ஒருவருக்கு திருமணமாகவில்லை. நான் இறந்து போன எனது தாயாரை சார்ந்து ஜீவனாம்சம் நடத்தவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் காலமாகும் போது அவருக்கு வயது 70 என்றால் சரியல்ல, 60 வயது என்று சாட்சி கூறுகிறார். எனது வயது 52 என்றால் சரிதான். எனக்கு வயது 52 ஆக இருக்கும் போது எனது தாயாருக்கு வயது 60 வயதாக இருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது தாயார் கிழமேல் ரோட்டில் ஆடு மேய்த்து கொண்டிருந்தார் என்று மனுவில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அப்போது மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி வந்த லாரி சாலையில் மெதுவாக தான் வந்தது என்றால் சரியல்ல. சாலையில் ஆடுகள் வாகனம் வரும் போது குறுக்கே சென்றதால், எனது தாயாரும் அவர் சென்ற திசையில் இருந்து வலதுபக்கம் குறுக்காக சாலையை கடந்ததால் தான் விபத்து என்றால் சரியல்ல. எனது தாயார் குறுக்கே சாலையை கடந்ததால் 1வது எதிர்மனுதாரர் வாகனத்தை பிரேக் பிடித்து நிறுத்த முயற்சித்தார் என்றால் சரியல்ல. 1வது எதிர்மனுதார் பிரேக் பிடிக்க முயற்சித்த போதும் எனது தாயார் கண்ணம்மாள் வாகனத்தில் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. விபத்து 1ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது தாயார் தான் பொறுப்பு என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு எனது தாயார் பொறுப்பு என்பதால் 1வது எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றும், அதை காவல் நிலையத்தார் வாங்க மறுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் இழப்பீடு பெறுவதற்கு நாங்கள் அருகதையற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள்

கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்று சொன்னால் சரியல்ல. எனது தாயார் இறப்பினால் எங்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல. மனவலி, அன்பு, பாசத்திற்காக கோரிய தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் விபத்திற்கு காரணமானதாக சொல்லப்படும் லாரி காப்பீடு செய்யப்பட்டு அது அமலில் இருந்தது என்று சொன்னால் சரிதான். 2வது எதிர்மனுதாரருக்காக 3வது எதிர்மனுதாரர் இழப்பீடு தொகை செலுத்த கடமைப்பட்டவர் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். விபத்து யாருடைய அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது தாயார் ஆடு மேய்த்து கொண்டிருந்தார் என்று முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் ஆடுகள் சாலையின் சென்று விபத்தில் இறந்துவிடக்கூடாது என்ற பதட்டத்தில் எனது தாயார் சாலையின் குறுக்கே சென்று ஆடுகளை விரட்டியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு எனது தாயாரின் அஜாக்கிரதை தான் காரணம் என்று சொன்னால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் எனது தாயாரின் வயது 80 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரேத பரிசோதனை அறிக்கையில் எனது தாயாரின் வயது 78 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து பதிவேடு, முதல் தகவல் அறிக்கை, உடற்கூராய்வு அறிக்கை ஆகியவற்றில் எனது தாயார் பெயர் சின்னம்மாள் என்ற பாப்பாத்தியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பெயர் கண்ணம்மாள் என்று முதல் விசாரணையிலும், மனுவிலும் குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். எனது தாயார் பெயர் கண்ணம்மாள் என்று நிருபிப்பதற்கு எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சாட்சி முதல் தகவல் அறிக்கையிலும், உடற்கூராய்வு அறிக்கையிலும் தவறாக எனது தாயார் பெயரை குறிப்பிட்டுள்ளார்கள் என்று கூறுகிறார். மேற்படி தவறை சரிசெய்வதற்கு சம்பந்தப்பட்ட துறையில் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது தாயாரின் பெயர் சின்னம்மாள் என்ற பாப்பாத்தியம்மாள் என்றால் சரிதான். கண்ணம்மாள் வேறு

சின்னம்மாள் என்ற பாப்பாத்தியம்மாள் வேறு எனவே நான் இழப்பீடு கோர உரிமையற்றவன் என்றால் சரியல்ல. எனது தாயார் இறக்கும் போது வயது 80 என்பதால் எனது தாயாரின் வருமானத்தை சார்ந்து நாங்கள் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு பிறகு மோட்டார் வாகன ஆய்வாளரிடம் போலியான ஓட்டுநர் உரிமத்தினை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்ததாக போலியான ஓட்டுநர் உரிமத்தினை நம்பி அறிக்கை வழங்கியுள்ளார்கள் என்றால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் இல்லாத 1 ம் எதிர்மனுதாரர் வாகனத்தை இயக்கியதால் 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவரல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது தாயார் காரணம் என்பதாலும், ஓட்டுநர் உரிமம் 1ம் எதிர்மனுதாரருக்கு இல்லாததாலும், 3ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க முடியாது என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/-M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.